

# Budget Simplified 2016

வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் வணக்கம்,

2016 பிப்ரவரி 29 என லீப் ஆண்டு நாளில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதும் சுவாரசியமான ஒன்றாகும். அடுத்த ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.5% ஆகக் கட்டுப்படுத்தப்படும் என நிதியமைச்சர் உறுதியளித்துள்ளார். பொருளாதாரத்தின் வட்டி விகிதங்களுக்கு ஏற்ப வழங்கப்பட்டுள்ள இந்தப் பட்ஜெட் மிகவும் பாராட்டத்தக்கதுடன் நேர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தும். இந்தப் பட்ஜெட்டின் தொடர்ச்சியாக, மார்ச் மாதத்தில் வட்டி விகிதங்கள் மற்றும் ரெபோ விகிதங்களை குறைப்பதற்கு இந்திய ரிசர்வ் வங்கி பரிசீலனை செய்யும் என எதிர்பார்க்கிறேன்.

வங்கிகள் அதிகப்படியான வங்கிக் கடன் பத்திரங்களைக் கொண்டிருப்பதால், இந்தப் பட்ஜெட் வங்கியின் பேலன்ஸ் ஷீட்டிற்கு உதவும் என நம்புகிறேன். கிராமப்புற வளர்ச்சி, உள்கட்டமைப்பு, நிதித்துறைச் சீரமைப்பு, சமுதாய வளர்ச்சி, சுகாதாரம், கல்வி உட்பட 9 முக்கியத் திட்டங்களில் நிதியமைச்சர் கவனம் கொண்டிருப்பது, நமது எதிர்காலத்தின் வலிமையான அடித்தளத்திற்கான படிகளாகும். இந்தியக் குடிமகனின் பார்வையில் பார்க்கும்போது, பட்ஜெட்டானது உடனடியாக இந்தியர்களின் நிதிச் சேமிப்பிற்கு மிகப்பெரிய ஊக்க சக்தியாக இருக்கும் என நினைக்கிறன். இருப்பினும், உலகளாவிய பொருளாதாரச் சவால்களைச் சந்திப்பது முற்றிலும் கடினமாகவே தொடர்ந்து இருப்பது எதிர்மறையான ஒன்றாகவே தொடர்கிறது. நாம் இப்போது உண்மையில் உலகின் பிற நாடுகளின் பொருளாதாரச் சவால்களின் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த பட்ஜெட் விவசாயிகள் மற்றும் இந்திய கிராமப்புறத்திற்கு ஆதரவாகவும், அதே சமயம் சந்தைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தாத வகையிலும் அமைந்துள்ளது என்பதை மனதில் கொள்ள வேண்டும். டிவிடண்ட்கள் உட்பட அதிக வருமானம் பெறும் இந்தியர்கள் அதிகமாக வரிகளைச் செலுத்த வேண்டியிருக்கும், ஆனால் ஒரு இந்தியனாக, இந்தியாவின் நிதிநிலையை ஒட்டுமொத்தமாக சரிசெய்வதில் இந்தியர்கள் பங்களிக்க வேண்டும் என நம்புகிறேன். இந்தப் பட்ஜெட் நேர்மறையாக உள்ளதாக உணர்கிறேன், மேலும் நீண்ட கால கண்ணோட்டத்தில் பார்க்கையில், இது சரியான திசையில் பயணிக்க ஒரு முக்கிய படியாகும். அதே சமயத்தில், கறுப்புப் பணம் வைத்திருக்கும் இந்தியர்கள், அதற்கு 45% வரி செலுத்தும் ஒற்றை வாய்ப்பையும் அரசு வழங்கியுள்ளது. கூடுதலாக, பழைய வரிவிதிப்பு முறையிலிருந்து வெளிவருவதன் மூலம், இந்திய அரசாங்கத்துடனான சர்வதேச நிறுவனங்களின் வரி வழக்குகளும் தீர்வுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆக, இந்தியாவின் நம்பகத்தன்மையையும், நிலைத்திருக்கக்கூடிய பாதையில் இந்தியாவைப் பயணிக்க செய்வதையும் அதிகரிக்க இவற்றில் சில உதவும் என நினைக்கிறேன்.

இது இந்த அரசாங்கத்தால், அவர்களின் பதவிக்காலத்தின் மத்தியிலோ அல்லது அதற்கு நெருங்கிய காலத்திலோ எடுக்கப்பட்ட மிக முக்கிய படியாகும். இந்திய நிதி சேமிப்புகளில் உள்ள ஒவ்வொரு ஈக்விட்டி முதலீட்டாளர்கள், பத்திர முதலீட்டாளர்கள் மற்றும் அனைத்து முதலீட்டாளர்களும் சிறந்த எதிர்காலத்தைப் பெற வாழ்த்துகிறேன், மேலும் இந்தப் பட்ஜெட் சரியான திசையை நோக்கி பயணிப்பதற்கான பட்ஜெட்டாகவே எடுத்துக்கொள்கிறேன்.

Kotak Securities Limited. Registered Office: 27 BKC, C 27, G Block, Bandra Kurla Complex, Bandra (E), Mumbai 400051. CIN: U99999MH1994PLC134051, Telephone No.: +22 43360000, Fax No.: +22 67132430. Website: www.kotak.com . Correspondence Address: Infinity IT Park, Bldg. No 21, Opp. Film City Road, A K Vaidya Marg, Malad (East), Mumbai 400097. Telephone No: 42856825. SEBI Registration No: NSE INB/INF/INE 230808130, BSE INB 010808153/INF 011133230, MSEI INE 260808130/INB 260808135/INF 260808135, AMFI ARN 0164, PMS INP000000258 and Research Analyst INH000000586. NSDL: IN-DP-NSDL-23-97. CDSL: IN-DP-CDSL-158-2001. Compliance Officer Details: Mr. Manoj Agarwal. Call: 022 - 4285 6825, or Email: ks.compliance@kotak.com. In case you require any clarification or have any concern, kindly write to us at below email ids: • Level 1: For Trading related queries, contact our customer service at 'service.securities@kotak.com' and for demat account related queries contact us at ks.demat@kotak.com or call us on: Online Customers – 30305757 (by using your city STD code as a prefix) or Toll free numbers 18002099191 / 1800222299, Offline Customers – 18002099292 • Level 2: If you do not receive a satisfactory response at Level 1 within 3 working days, you may write to us at ks.escalation@kotak.com or call us on 022-42858445 and if you feel you are still unheard, write to our customer service HOD at ks.servicehead@kotak.com or call us on 022-42858208. • Level 3: If you still have not received a satisfactory response at Level 2 within 3 working days, you may contact our Compliance Officer (Name: Manoj Agarwal) at ks.compliance@kotak.com or call on 91- (022) 4285 6825. • Level 4: If you have not received a satisfactory response at Level 3 within 7 working days, you may also approach CEO (Mr. Kamlesh Rao) at ceo.ks@kotak.com or call on 91-(022) 6652 9160. Investments in securities are subject to market risk, please read the SEBI prescribed Combined RDD prior to investing.

kotak Securities